மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.14/2019

வாக்குமூலம்: வா.சா.1 ஈஸ்வரன்

18.03.2024: சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– இந்த வழக்கை நான் முதலில் 1ம் பிரதிவாதி மீதுதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஐ.ஏ.56/2019இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து பழனி சார்பு நீதிமன்றத்தில் சி.எம்.ஏ.5/2021 என்ற மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மனு நிலுவையில் உள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி மனு முழுமையாக விசாரணை செய்து முடிவு செய்வதற்கு முன்பு இந்த வழக்கை நடத்த இயலாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.46/22022 ஆக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

2) 1ம் பிரதிவாதியை நான் கொலை செய்துவிட்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அது பொய் வழக்கு. 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றாலும், அவர்கள் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் சரிதான். 3ம் பிரதிவாதி பெயரை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அதனை சரி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் குறித்து எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. நான் எந்தவித பரிகாரமும் கேட்காததால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3) 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்தபோது வழக்குச் சொத்தில் கிணற்றுக்கு மேற்கே இருந்த சோலார் வேலி அகற்றப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அதனால் நான் கிணற்றுக்குப் போக எவ்வித இடையூறும் இல்லை என்றால் சரியல்ல. தாவா நிலத்தை சுற்றி உள்ள சோலார் வேலியை அகற்றிக் கொடுக்கக் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரும் மனு நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், பிரதிவாதிகள்தான் தாக்கல் செய்தார்கள் என்றாலும் சரியல்ல, நான்தான் தாக்கல் செய்தேன். பிரதிவாதிகளால்தான் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு, அதன்பேரில் நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிட்டு அறிக்கை அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

4) பிரதிவாதிகளின் இடத்திற்கு அருகில் எனக்கு இடம் உள்ளதா என்றால் உள்ளது. கிணற்றுக்கு கிழக்கே நான் இடம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் உள்ள நீரை கிணற்றுடன் தொடர்புடைய நிலங்களுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும், ஆனால் நான் கிரையம் பெற்றுள்ள நிலத்திற்கு பயன்படுத்த பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வேலியை அகற்றிவிட்டால் நான் கிரையம் பெற்ற நிலத்திற்கு தண்ணீர் எடுத்துச்செல்ல வசதியாக இருக்கும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றாலும், என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u> இல்லை.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

Sd/S.Kabaleeswaran
District Munsif,
Palani.